# அறிவித்தல்

## கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம்

# தகுதிகாண் பரீட்சைக்காக விண்ணப்பம் கோரல்

## பல்கலைக்கழகப் பிரவேசம் - 2022/ 2023 கல்வி ஆண்டு

### கட்புலக் கலை இளமானி / அரங்கக் கலை

**(சங்கீதம்/ நடனம்/ நாடகம் மற்றும் அரங்கம்)**

### கௌரவ பட்டக் கற்கைநெறி

**(2022 க.பொ.த. உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில்)**

2022ஆம் வருடத்தில் நடந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2022/ 2023 கல்வி ஆண்டிற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள அபேட்சகர்களிடமிருந்து தகதிகாண் பரீட்சைக்காக 2023 செப்டெம்பர் 18ஆம் திகதி முதல் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான ஆகக்குறைந்த தகைமைகள்

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ‘‘இலங்கை பல்கலைக்கழகத்தில் ஆரம்ப பட்டக் கற்கை நெறிக்கான அனுமதி, 2022/ 2023 கல்வி ஆண்டு (க.பொ.த. உயர்தர பரீட்சை 2022)” மாணவர் கையேட்டின் பிரகாரம் பல்கலைக்கழக அனுமதிக்காக பூர்த்தி செய்யவேண்டிய ஆகக்குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள

மற்றும்

சித்திரம் மற்றும் சிற்பக் கலை / சங்கீதம் / நடனம் / நாடகம் மற்றும் அரங்கக் கலை போன்ற பாடங்களில் கற்பதற்கு எதிர்பார்க்கும் கற்கை நெறிக்கு குறித்த வருடத்தில் 2022 க.பொ.த (உ/த) பரீட்சையில் ஆகக் குறைந்தது திறமைச் சித்திகள் (C) சகிதம் தோற்றி மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்.

(ii) பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான மேற்கூறிய ஆகக்குறைந்த தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்கள் அதற்குப் புறம்பாக கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

02. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**

விண்ணப்பதாரர்கள் பின்வரும் இணைப்பின் (Link) ஊடாக பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் முகாமைத்துவ முறைமையில் (EMS) பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிகழ்நிலை (online) முறையில் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும். https://ems.vpa.ac.lk/aptitude_test_registration?id=3 விண்ணப்பிக்க வேண்டிய இறுதி நாள் 2023 ஒக்டோபர் 06ஆம் திகதியாகும்.

03. கொடுப்பனவு செய்ய வேண்டிய முறை

தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களிடமிருந்து ஒரு கற்கை நெறிக்காக 2000.00 ரூபா கட்டணம் அறவிடப்படும். இந்தக் கொடுப்பனவை கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பெயரில் இலங்கை வங்கி சுதந்திர சதுக்க கிளையில் பேணப்படும் 84072227 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவாகும் வகையில் இலங்கையின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் மேற்கொள்ளலாம். வங்கிக் கிளையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது, விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது உங்களுக்குக் கிடைக்கும் அனுமதி இலக்கத்தை (Admission Number) அதில் குறிப்பிடுதல் கட்டாயமாகும். பண வைப்பு இயந்திரம் (CDM) மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் செல்லுபடியாகாது.

க.பொ.த (உ/த) அழகியற்கலை இரண்டு பாடங்களில் தோற்றி அந்த இரண்டு பாடங்களுக்காகவும் தகுதிகாண் பரீட்சைக்காக தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் அபேட்சகர்கள் அந்த இரண்டு பாடங்களையும் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். இரண்டு பாடங்களுக்காக இரண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் இதன்போது ஒவ்வொரு பாடத்திற்காகவும் கிடைக்கும் அனுமதி இலக்கத்தை (Admission Number) அதில் குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

விண்ணப்பதாரர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகளை பல்கலைக்கழகத்தினால் எப்போதாவது சமர்ப்பிக்குமாறு அறிவித்தால் சமர்ப்பிப்பதற்கு அதனை பாதுகாப்பாக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். (i) வங்கிக் கிளைக்கு செலுத்தியிருந்தால் குறித்த பற்றுச்சீட்டு (ii) தேசிய அடையாள அட்டை (iii) 06 மாதத்திற்கு எடுக்கப்பட்ட தெளிவான மேற்புற புகைப்படம் (iv) 2022 க.பொ.த உயர்தர பெறுபேறு ஆவணம்.

04. முழுமையற்ற, பொய்யான தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறான வேளையில் விண்ணப்பதாரரினால் செலுத்தப்பட்ட கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

05. கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக அனுமதிக்காக தோற்றும் சகல மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதிக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

06. இந்த தகுதிகாண் பரீட்சை நடாத்தப்படும் நாளில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் கையடக்கத் தொலைபேசிக்கு குறுஞ்செய்தியாக (SMS) அல்லது அவர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு (e-mail) மட்டும் அறியத்தரப்படும் என்பதுடன் தபால் மூலம் அறிவிக்கப்படமாட்டாது. இந்த தகுதிகாண் பரீட்சை சிங்கள மொழியில் மட்டும் நடாத்தப்படும்.

07. மேலதிக விபரங்களுக்கு பல்கலைக்கழக (www.vpa.ac.lk) இணையதளத்திலுள்ள “Aptitude Test - 2022/2023” இற்குப் பிரவேசிக்கவும்.

**பதிவாளர்,**
**கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம்,**
**தொ.பே. : 011-2033710**
**2023-09-13**